இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறை
இயற்கை விஞ்ஞானத்தில் கல்வி இளமாணி சிறப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022
மட்டம் - 5
இறுதிப் பரீட்சை – 2022
STU5317/STU 6306– சிறுவர் உரிமைகள்
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 25.11.2022 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

இவ் வினாத்தாள் இரண்டு (02) பகுதிகளைக் கொண்டது.

பகுதி - I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி – I

1. சிறுவர் உரிமைகள் என்ற பதத்தினை வரையறுக்குக.
2. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கை சிறுவர்களோடு தொடர்புபட்ட வகையில் சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட நடைமுறைகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.
3. பாகுபாடற்ற கொள்ளை (Principle of nondiscrimination) என்பதனால் கருதப்படுவது யாது?
4. சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டிற்கிணங்க, பாதுகாப்பு தேவைப்படுகின்ற சிறுவர் குழுவினர் ஐந்தினைப் (05) பெயரிடுக.
5. சிறுவர்களுக்கான பங்குபற்றுதல் உரிமைகள் என்பதனால் கருதப்படுவது யாது?
6. விசேட சூழ்நிலைகளுக்கு உட்படுத்தக்கூடிய சிறுவர்கள் என கருதப்படுவோர் யார்?
7. சிறுவர் உரிமைகள் தொடர்பான குழுவின் பரிந்துரைகள் மற்றும் முக்கிய பணிகள் மூன்றினை (03) எழுதுக.
8. விஞ்ஞான ஆய்வுகூடங்களில் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் விஞ்ஞான ஆசிரியரினால் மேற்கொள்ளப்படும் பொறுப்புக்கள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. புராதன இலங்கையில் சிறுவர் உரிமைகள் தொடர்பான சூழ்நிலையினை விவரிக்குக.

(05 புள்ளிகள்)

ii. இலங்கை சிறுவர்களின் சூழ்நிலையினை மேம்படுத்துவதற்கு ஒல்லாந்தர் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் நான்கினை (04) பட்டியலிடுக.

(05 புள்ளிகள்)

iii. இலங்கையில் சுதந்திரத்திற்கு பின்பு சிறுவர் உரிமைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

10.

i. சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளின் வகைப்பாடுகள் நான்கினைப் (04) பெயரிடுக.

(05 புள்ளிகள்)

ii. சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் சரத்துக்களில் விசேடமாக சிறுவர் உரிமைகளின் பாதுகாப்பு தொடர்பில் காணப்படும் விசேட கருத்துக்கள் ஐந்தினை (05) விவரிக்குக.

(05 புள்ளிகள்)

iii. இலங்கையில் சிறுவர்களின் பாதகாப்பினை விருத்திசெய்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடைமுறைகள் ஐந்தினை (05) விவரிக்குக.

(10 புள்ளிகள்)

11.

i. பிள்ளை வளர்ச்சி மற்றும் விருத்தி ஆகிய எண்ணக்கருக்களை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. தாய் மற்றும் குழந்தையின் ஆராக்கியம் மற்றும் போசாக்கு நிலைமையின் அடிப்படையில் சிறுவர்களின் உயிர்வாழும் உரிமையை பாதிக்கும் காரணிகள் இரண்டினைக் (02) குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. இலங்கையில் தற்போதுள்ள சூழ்நிலையில் தாய் மற்றும் குழந்தையின் ஆராக்கியம் மற்றும் போசாக்கு நிலைமையின் அடிப்படையில் வாழ்வதற்கான உரிமையை பாதிக்கும் பிரச்சினைகள் இரண்டினை (02) ஆலோசனை செய்து, ஒரு சமூகமாக அப் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு இரண்டு (02) ஆலோசனைகளை வழங்குக.

(08 புள்ளிகள்)

12.

i. விசேட சூழ்நிலைகளுக்கு உட்பட்ட சிறுவர்கள் அத்துடன் விசேட தேவைகளுடன்கூடிய சிறுவர்கள் என்பதனால் நீர் கருதுவது யாது?

(04 புள்ளிகள்)

ii. விசேட தேவைகளுடன்கூடிய சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர்களின் வகிபங்கினை மூன்று (03) உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

iii. விசேட சூழ்நிலைக்கு உட்பட்ட சிறுவர்கள் தொடர்பில் அரசாங்கத்தினது வகிபங்கினை நான்கு(04) உதாரணங்கள் குறிப்பிட்டு ஆலோசனைசெய்க.

(08 புள்ளிகள்)

13.

i. சிறுவர் உரிமைகள் தொடர்பில் இலங்கை சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான மூன்று (03) தொடர்பாடல் உபாயங்களை குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii. சிறுவர் உரிமைகள் தொடர்பில் இலங்கை சமூகமானது ஏன் விழிப்புணர்வை அடைய வேண்டும். இரண்டு (02) உதாரணங்களை குறிப்பிட்டு விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. சிறுவர் உரிமைகள் தொடர்பில் சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துகையில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினை (02) விளக்குக.

(10 புள்ளிகள்)

14.

i. குடும்பமற்ற சிறுவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சட்டங்கள் தொடர்பில் சுருக்கமாக குறிப்பிடுக

(04 புள்ளிகள்)

ii. இலங்கையினுள் உள்நாட்டுக்குள்ளே இடம்பெயர்ந்துள்ள சிறுவர்களின் உரிமைகள் தொடர்பில் ஆராய்க. (08 புள்ளிகள்)

iii. மேற்கூறப்பட்ட சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எடுக்கக்கூடிய நடைமுறைகள் தொடர்பில் கருத்துரைக்குக.

(08 புள்ளிகள்)

**20 x 03 = 60** புள்ளிகள்

மொத்த புள்ளிகள் =100

*பதிப்புரிமை பெற்றது*